Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 5, 2021

திங்கட்கிழமை ஜூலை 05, 2021 | ஒளி: 07 கதிர்: 39 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | free

15 வயது பாலியல் விவகாரம்:

## இணையத்தள வடிவமைப்பாளர், உரிமையாளர் இருவரும் கைது

இணையத்தளத்தின் ஊடாக 15 வயதான சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினர், விளம்பரப்படுத்தினர் மற்றும் தகவல்களை வழங்கி வாடிக்கையாளர்களை வரவழைத்தனர் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ், இதுவரையிலும் 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறுப்பட்ட தரப்பினருக்கும், மூன்று மாதங்களுக்கு ரூபாய் 15 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் அச்சிறுமி விற்பனை செய்யப்பட்டுள்ளார் என விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தளர்வும் தடையும் 19 வரை நீடிப்பு

ஜூன் 21ஆம் திகதியுடன் தளர்த்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மீதான தளர்வு, ஜூலை 19ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாகாணங்களுக்கு இடையில் அமலில் இருக்கும் போக்குவரத்துத் தடை இன்று முதல் 14 நாள்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அறிவிப்பு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தனவால், நேற்று (04) மாலை விடுக்கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

# ‘டெல்டா வகை உருமாறுகிறது’

### ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா, டெல்டா பிளஸ் நீண்டு செல்கிறது பட்டியல்

**கொரோனா தொற்றின் டெல்டா மாறுபாடு, கிட்டத்தட்ட 100 நாடுகளில் பரவியிருக்கிறது**

**பாதிப்பில் இருந்து தப்பித்துக்கொள்ள தடுப்பூசி செலுத்திக் கொள்வதே ஒரே வழி**



ஜெனீவா: உலகம் முழுவதும் பரவி வரலாறு காணாத பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால் இதன் தீவிரத்தைக் கணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



## வழிபாடு...

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்று (04) விஜயம் செய்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ ஆகிய இருவரும், சமய வழிபாட்டில் ஈடுபட்டு, ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.
இவ்விருவரும் தலதா மாளிகைக்குச் சென்ற வேளையில், தியவடன நிலமே பிரதீப் நிலங்க தெல, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோர் வரவேற்றனர்.

## ரங்கே ஆரூடம்



இவ்வருடம் டிசெம்பர் மாதத்துக்குள், ஏனைய கட்சிகளை விடவும் ஐக்கிய தேசிய கட்சியைப் பலம்மிக்க அரசியல் கட்சியாகக் கட்டியெழுப்பப்படுமென, அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பதிவுத் திருமண நிகழ்வு:

## பெண்ணுக்கு கொரோனா

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பதிவுத் திருமணம் நிகழ்வில் கலந்துகொண்ட பெண்ணொருவருக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை, பருத்தியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண்ணே, இவ்வாறு தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘எதிர்காலம் இன்னும் மோசமானதாக இருக்கும்’

**எமது கவனயீனம் காரணமாக, இந்தத் தொற்று மிக வேகமாக நாடளாவிய ரீதியில் பரவிகொண்டிருக்கின்றது**



இந்நாள்களில் பரவுகின்ற நோயின் தாக்கம், இன்னுமொரு மாதத்தில், தெரியவருமெனத் தெரிவித்துள்ள இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவியான விசேட வைத்தியர் பத்மா குணரத்ன, ஒரு மாதத்துக்குப் பின்னரே பெறுபேற்றைக் காணமுடியும் என்றார்.

கடந்த காலங்களில் அமலில் இருந்த பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவே கொரோனா மரணங்கள் குறைந்திருந்தன எனத் தெரிவித்துள்ள அவர், இக்காலப்பகுதியில், தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகளை மிகவேகமாக முன்னெடுத்திருக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

# ‘ஸ்பா’க்களை திறக்க அனுமதி

**விடுதிகள், பார்கள் மற்றும் இரவு விடுதிகள் மீளவும் ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை**

நாடளாவிய ரீதியிலும் மேல் மாகாணத்திலும் அமல்படுத்தப்பட்டிருந்த சுகாதார வழிகாட்டல்கள் திருத்தப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகள் யாவும் இன்று (05) முதல் அமல்படுத்தப்படுமென சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். இந்நிலையில், இந்த நடைமுறைகள் யாவும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையிலும் அமல்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சுற்றறிக்கையின் பிரகாரம், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி உண விடுதிகள், ஸ்பாக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், ஹோட்டல், ஓய்வு விடுதிகளும், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றிச் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## ‘பத்திக்’ மூலமாக இருவரையும் கோர்த்துவிட முயற்சிப்பது தவறு’



பத்திக் கைத்தொழில் அமைச்சு வழங்கப்பட்டுள்ள விவகாரத்தில் ஒருவருடன் மற்றொருவரை கோர்த்துவிடுவதற்கு முயற்சிப்பது தவறாகுமெனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அவ்வணியில் இருப்பவர்களுக்கு நல்ல அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளமையையும் நினைவுபடுத்தினார்.

தொடர்ச்சி P2

## முகக் கவசம் அணியத் தவறியவர் மீது இராணுவம் தாக்குதல்

■ சண்முகம் தவசீலன்



முகக்கவசம் அணிந்து செல்லாத இளைஞன் ஒருவர் மீது, இராணுவ வீரர் ஒருவர் தாக்குதல் நடத்திய சம்பவமொன்று, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை சந்தியில், நேற்று (04) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## 3 நாடுகளிலிருந்து டுபாய்க்கு எமிரேட்ஸ் பறக்காது

எமிரேட்ஸ் விமான நிறுவனம், டுபாய்க்கான விமானப் பயணிகளுக்கான சேவைகளை, ஜூலை 15 வரையிலும் இடைநிறுத்தி வைத்துள்ளது.

ஐக்கிய அமீரக அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு அமையவே, இச்சேவைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான்



ஆகிய நாடுகளிலிருந்து டுபாய்க்கு பயணிகளை ஏற்றுவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## ‘அலைபேசி ஆடம்பர பொருளாயின் இணைய வழியில் கல்வி எதற்கு?’

அலைபேசி, குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி உள்ளிட்டவைகளை ஆடம்பரப் பொருள்கள் எனக் கூறி, அவற்றின் இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்யப் போவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, இணையவழியில் கல்வியைப் படிக்குமாறு மாணவர்களிடம் கூறுகின்றனர். ஆனால், அலைபேசியை ஆடம்பரப் பொருள் எனத் தெரிவித்து, இறக்குமதியைத் தடை செய்ய நினைப்பது நகைப்புக்குரிய விடயம் என்றார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




தொடர்ச்சி P2

மாணவர்கள், ஆசிரியர்களுக்கு

## ஊவாவில் 1,612 ‘டெப்’களை வழங்கினார் செந்தில் தொண்டமான்

ஊவா மாகாணத்தில், பதுளை, பண்டாரவளை, பசறை, வெலிமடை ஆகிய கல்வி வலயங்களில் உள்ள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட 27 பாடசாலைகளில், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு 1,612 ‘டெப்’களை





தொடர்ச்சி P2

## ‘பங்காளிகள் சிலரின் செயற்பாடுகள் பலவீனப்படுத்தும் வகையில் உள்ளன’

பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகைக்குப் பின்னர், அரசியல் மட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படும் என தெரிவித்த துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, “தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்” என்றார்.



தொடர்ச்சி P2



## வற்றாப்பளை கண்ணகி அம்மனை தரிசித்தார் பவித்ரா

■ சண்முகம் தவசீலன்

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நேற்று (04), வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுக்குச் சென்று, நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# இன்று முடிவு

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில், இன்று (05) நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.


பாராளுமன்றம் தொடர்பிலான குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், இன்று (05) காலை கூடவுள்ளது. இதன்போது, இவ்வாரத்துக்கான கூட்டத்தொடர் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எட்டப்படும்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ரங்கே ஆருடம்



"எனவே, நாட்டை பலவீனப்படுத்தாமல், சகலரும் ஓரிடத்துக்கு வரவேண்டுமென, திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவுடன் கைகோர்த்துக்கொண்டு பயணிப்பதே உசிதமானது" என்றார்.

ஆகையால், அந்த திறந்த அழைப்பு தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நினைவுப்படுத்துவதாகத் தெரிவித்த பாலித ரங்கே பண்டார அதற்காக, வெட்கப்பட வேண்டியதில்லை என்றார்.

## பெண்ணுக்கு கொரோனா

குறித்த பெண்ணுக்கு, நேற்று முன்தினம் (03), திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து, அவர், ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், தொற்று உறுதி செய்யப்பட்டது.

அவருடன் தொடர்பை பேணியவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த போது, குறித்த பெண்ணின் வீட்டுக்கு அருகில், அண்மையில் பதிவுத் திருமண நிகழ்வொன்று நடைபெற்றதாகவும், அதில், குறித்த பெண்ணும் கலந்துகொண்டிருந்தாகவும் தெரியவந்துள்ளது..

இதையடுத்து, பதிவுத் திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## 'ஸ்பாக்'களை திறக்க அனுமதி

இருப்பினும், விடுதிகள், பார்கள் மற்றும் இரவு விடுதிகள் மீளவும் ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருமண வைபவங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், 10 நபர்களின் பங்குப்பற்றலுடன் பதிவுத் திருமணத்தை முன்னெடுக்கலாம். அத்துடன், சகல மத வழிபாட்டிடங்களும் மறு அறிவித்தல் வரையிலும் மூடப்பட்டுள்ளன.

## 'அலைபேசி ஆடம்பரப் பொருளாயின் இணைய வழியில் கல்வி எதற்கு?'



மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "செல்லும் பயணம் தெளிவாக இருக்க வேண்டும். தேசபக்தி கதைகள் ஊடாக இனவாதங்களை தூண்டி அரசியல் பழிவாங்கல் கதைகளைக் கூறும் இந்த அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் பலவீனம் குறித்து மக்கள் இப்போது விழிப்படைந்து உள்ளனர்" என்றார்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஆசனத்தை மாற்றப் பார்ப்பதாகவும் தமக்கு முடியாத விடயத்தை மற்றொருவரைக் கொண்டு வந்து செய்யப் போகின்றனர். இனி குடுமபத்தினர் ஒன்று சேர்ந்து உண்டு மகிழ்ந்து குடும்பத்திலிருந்து வேறு யாரை கொண்டு வருவதென தீர்மானிப்பர்.

பின்னர் நாட்டில் ஜனநாயகம் இருப்பதை காட்டுவதற்காக, கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடம் இது குறித்து தெரிவித்து, மற்றுமொரு சகோதரரையும் கொண்டு வருமாறு கூறுவர், மூன்றில் இரண்டு அதிகாரம் வழங்கி, 20ஆவது திருத்த்தை நிறைவேற்றினாலும் இன்னும் இவர்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. எனவே, ஆசனத்தை மாற்றினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்பது தொடர்பில், மக்கள் புரிந்துகொண்டுள்ளனர் என்றார்.

# 'டெல்டா வகை உருமாறுகிறது'


கொரோனா வைரஸ் கிருமியானது, அது கண்டறியப்பட்ட காலத்தில் இருந்து தற்போது வரை பல்வேறு நாடுகளில் ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா, டெல்டா பிளஸ் என தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருகிறது.

தற்போது அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்ற டெல்டா வகை வைரஸ், இந்தியாவில் மிக வேகமாகப் பரவி அதிக பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியதுடன், உலகம் முழுவதும் ஏராளமான நாடுகளில் பரவியுள்ளது. இந்த டெல்டா வகையை தொடர்ந்து தற்போது டெல்டா பிளஸ் வகை கொரோனா பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது என்றும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் தெரிவித்துள்ளார்.

"கொரோனா தொற்றின் டெல்டா மாறுபாடு, கிட்டத்தட்ட 100 நாடுகளில் பரவியிருப்பதால், தொற்றுநோயின் மிகவும் ஆபத்தான காலகட்டத்தில் உலகம் உள்ளது" என எச்சரித்துள்ளார்.

இந்த ஆபத்துக்கு எந்தவொரு நாடும் விதிவிலக்கு அல்ல என்றும், டெல்டா வகை கொரோனா தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால், அது குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதே சமயம் தடுப்பூசிகள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை உலக நாடுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்வதன் மூலம் நாம் இந்த பாதிப்புகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள அவர், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தபட்சம் 10 சதவீத மக்களாவது கொரோனா தடுப்பூசி செலுத்தியிருப்பதை உலக நாடுகளின் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.



## 'பத்திக்' மூலமாக இருவரையும் கோர்த்துவிட முயற்சிப்பது தவறு'

"பத்திக் உள்ளிட்ட இன்னும் சில அமைச்சுகளை பசில் ராஜபக்ஷவே, தீர்மானித்தார் எனக் கூறப்படுவதில் எவ்விதமான உண்மையும் இல்லை" என்றார்.

பங்காளிக் கட்சிகளுக்கு அமைச்சு பிரித்து வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறான அமைச்சுகள் பிரிக்கப்பட்டுள்ளன என்பது அவர்களின் கட்சிப் பிரச்சினையாகும். இதில், பசில் ராஜபக்ஷவையோ அல்லது ஜனாதிபதியின் செயலாளரையோ கோர்த்துவிடுவது தவறாகும் என்றார்.

குருநாகலில் நேற்று (04) நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளரையும் பசிலையும் பற்றிக் கூறும் தயாசிறி ஜயசேகர, ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் இணைந்து பணிபுரிய தயார்



எனக் கூறுவதாகவும், இவர்கள் அனைவரும் ஒன்று என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

"பதவிகளை பகிர்ந்துகொள்வது அவர்களின் கட்சிப் பிரச்சினையாகும். அதில் எம்மை கோரித்துவிடக் கூடாது. இவ்வாறானவர்களின் அரசியல் அறிவு குறித்து நாம் புதுமையடையவில்லை. இவர்களின் இவ்வாறான கதைகளை நாம் 2015இலும் கேட்டுள்ளோம்" என்றார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இறப்பர் முத்திரைகளில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் விடயத்தை முழுமையாக நிராகரிக்கின்றோம் என தெரிவித்த அவர், கடந்த அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்கள் எவ்வாறு கவனிக்கப்பட்டார் என்பது எமக்குத் தெரியும் என ஞாபகப்படுத்திய அமைச்சர் ஜோன்ஸ்டன், இராஜாங்க அமைச்சர்களின் அதிகாரங்கள் வர்த்தமானியில் வெளியிட்டு இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே ,ஜனாதிபதியும் பிரதமரும் சரியான தீர்மானத்தை எடுத்து செயற்படுகின்றனர் என்றார்.

எனவே, அரசாங்கத்தைக் கழிப்பதற்காக, இவ்வாறு கருத்துகளை தெரிவித்தாலும் மக்கள் அதனை நம்பாமல் நிரகரிப்பதுடன், தேர்தல் ஒன்று வரும்போது இது குறித்து தெரிந்துகொள்ளலாம் என்றார்.

## ஊவாவில் 1,612 'டெப்'களை வழங்கினார் செந்தில் தொண்டமான்

பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் வழங்கிவைத்தார்.

இந்த 'டெப்'கள் மாணவர்கள் 1,439 பேருக்கும், ஆசிரியர்கள் 173 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. ஊவா மாகாணத்திலுள்ள பெருந்தோட்டபுற பாடசாலைகளுக்கு முதல் கட்டமாக டெப் கணினிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி பாடசாலைகளுக்கு முதல் கட்டமாகவே இந்த 'டெப்' கள் வழங்கப்படவுள்ளன. மேலும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இவ்வாறான 'டெப்'கள் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றார்.

இணையவசதி இல்லாத பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு 'offline பாடசாலை' என்ற திட்டத்தின் கீழ், கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத மாணவர்களுக்காக, பதிவுசெய்யப்பட்ட கற்கைகள் மூலம் கற்பதற்கான டிவி ஸ்கிரீன்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## 'பங்காளிகள் சிலரின் செயற்பாடுகள் பலவீனப்படுத்தும் வகையில் உள்ளன'

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலமையகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில், அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை குறித்து எதிர்த் தரப்பினரே அதிக அச்சம் கொண்டுள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பொருளாதார விவகாரங்களை அவரே பொறுப்பேற்றார். அக்காலக்கட்டத்தில் பல சவால்கள் காணப்பட்டன. அனைத்து சலால்களுக்கும் மத்தியில் தேசிய பொருளாதாரம் சீரான நிலையில் முன்னேற்றமடைந்தது" என்றார்.

'அரசாங்கம் தோல்வி' என எவராலும் குறிப்பிட முடியாது. கொவிட் -19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அரசாங்கம் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, "தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் அபிவிருத்தி செயற்திட்டங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்கிறது. நாட்டின் அபிவிருத்திப் பணிகள் எக்காரணங்களுக்காகவும் தடைப்படாது" என்றார்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை தேசிய பொருளாதரத்தை பலப்டுத்தும் வகையில் அமையும். அவர், பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்று பலமான அமைச்சு பதவியை பொறுப்பேற்க வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர் பலமுறை எடுத்துரைத்துள்ளார்கள். அதற்கமைய, பசில் ராஜபக்ஷ இவ்வாரம் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவரது பாராளுமன்ற வருகையைத் தொடர்ந்து அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படும் என தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஒரு சில பங்காளிக் கட்சித் தலைவர்களின் செயற்பாடுகள் கூட்டணியை பலவீனப்படுத்தும் வகையில் அமைகின்றன. என்றார்.

## இணையத்தள வடிவமைப்பாளர் உரிமையாளர் இருவரும் கைது

கைது செய்யப்பட்டவர்களில் அந்தச் சிறுமியின் தாய், மிஹிந்தலை பிரதேச சபையின் பிரதித் தவிசாளர், கப்பலின் கெப்டன் உள்ளிட்டவர்களும் அடங்குகின்றனர்.

ஒட்டோ சாரதி, கார் சாரதி மட்டுமன்றி, அந்த இணையளத்தத்தை வடிவமைத்தவரும் அதன் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பலரும், கல்கிஸை நீதிமன்ற நீதவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோரை, ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொலிஸார், தெல்கொடவைச் சேர்ந்த தாயிடமிருந்தே, அந்தச் சந்தேகநபர் அச்சிறுமியை வாங்கியுள்ளார் என அறியமுடிகின்றது.

# 'எதிர்காலம் இன்னும் மோசமானதாக இருக்கும்'

"கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில், டெல்டா தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர்.

"ஒருவாரத்துக்கு நாட்டை மூடியதன் பின்னரே அதன் பெறுபேற்றை தெரிந்துகொள்ள முடிந்தது. அதனால் மரண விகிதம் குறைந்திருந்தது. தற்போது பரவிக்கொண்டிருக்கும் தொற்றின் பெறுபேறுகள், இன்னுமொரு மாதத்துக்குப் பின்னரே தெரியவரும்" என்றார்.

"பெறுபேறு வரும் வரையிலும் காத்திருந்தோமெனில், அதனைக் கட்டுப்படுத்த முடியாமற் போய்விடும். எனினும், எமது கவனயீனம் காரணமாக, இந்த தொற்று மிக வேகமாக நாடளாவிய ரீதியில் பரவிகொண்டிருக்கின்றது. நாடுமுழுதும் பரவிவிடும் என்றுகூட சொல்லாம்" என்றார்.

## முகக் கவசம் அணியத் தவறியவர் மீது இராணுவம் தாக்குதல்

இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் மீதே, இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனந்தபுரம் பகுதியில் இருந்து வைத்தியசாலைக்கு செல்வதற்காக இரணைப்பாலை சந்திக்கு முகக்கவசம் அணியாது இளைஞன் சென்றுள்ளார்.

இதன்போது, அப்பகுதியில் கடமையில் இருந்த இராணுவ வீரர் ஒருவர், அவ்விளைஞனை அழைத்து, முகக்கவசம் அணிந்து செல்லுமாறு கூறி இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாக தெரியவருகின்றது.

இச்சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள், இராணுவத்தினருடன் முரண்பட்டதுடன், முகக்கவசம் அணியாத காரணத்தால் ஒருவர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்த முடியுமா என வினவினர்.

இதனால், அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து,



சம்பவ இடத்துக்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸார், குறித்த இடத்திலிருந்து பொதுமக்களை அப்புறப்படுத்தி, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில், பாதிக்கப்பட்ட இளைஞன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்து, புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு, சிகிச்சை பெறச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வற்றாப்பளை கண்ணகி அம்மனை தரிசித்தார் பவித்ரா

கொரோனா தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் நேர்த்திக் கடன் வைத்திருந்தார் என அறியமுடிகின்றது. அதனை நிறைவேற்றும் முகமாக, நேற்று (04) கோவிலுக்கு வருகை தந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது.

தனிப்பட்ட நிகழ்வாக அமைச்சர் வழிபாடுகளில்



கலந்துகொள்ள வந்துள்ள நிலையில், அதனை ஒளிப்பதிவு செய்யவோ, புகைப்படங்களை எடுக்கவோ ஊடகங்களுக்கு அனுமதி இல்லை என, பொலிஸார் தெரிவித்தனர்.

### சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை

# விரைவாக முறையிடுங்கள்

தற்காலத்தில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களை, 1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு விரைவாக முறையிடுமாறு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை கண்காணிக்கும் நிறுவனங்களுக்கு 15 வீதமான முறைப்பாடுகளே கிடைக்கப் பெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வீடுகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றன எனவும்




இது பற்றிய தகவல்கள் உரிய வகையில் கிடைக்காமை கவலைக்குரிய விடயம் என்றும், சிறுவர் அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

சிறுவர்களை துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பது முழுச் சமூகத்தினதும் பொறுப்பாகும். சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களை உரிய தரப்புக்கு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சர்வதேச நெருக்கடியிலும்

## 'இலங்கையில் ஏற்றுமதி வளர்ச்சி கண்டுள்ளது'

சர்வதேச ரீதியில் பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் இலங்கையில் ஏற்றுமதி 31 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளமை நாடு என்ற ரீதியில் கிடைத்த பாக்கியம் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்றுமதி துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக அந்தந்த துறைகளின் நிபுணத்துவம் கொண்டவர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றி, மேலும் ஏற்றுமதி வளர்ச்சியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையால், 2021ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான தெளிவுப்படுத்தல் ஊடக சந்திப்பிலுயே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அமைச்சர், "கடந்தாண்டு ஜனவரியிலிருந்து மே மாதம் வரையான ஏற்றுமதி வருமானம், 2021 ஜனவரி தொடக்கம் மே மாதம் வரை 32.6 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

"2010 ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதிக்குள் காணப்பட்ட சேவை ஏற்றுமதி வருமானம் இந்த வருடம் குறித்த காலப்பகுதிக்குள் 27.3 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

"எனவே, இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 31 சதவீத த்தால் வளர்ச்சியடைந்துள்ளது" என்றார்.

சர்வதேச சந்தை வாய்ப்பை மேலும் விரிவு படுத்தும் நோக்கில், அமைச்சரவை அனுமதியின் பின்னர், ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அதன்மூலம் உலக சந்தையில் எவ்வித தடைகளுமின்றி சிறு மற்றும் மத்திய தர உற்பத்தியாளர்களுக்கு செயற்பட முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள்

## எண்மருக்கு திடீர் இடமாற்றம்



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் 7 பேரும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரும், உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சேவையின் தேவைகருதி, இவர்களுக்கு இந்தத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமை, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, குற்றத்தடுப்பு மற்றும் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க, பொலிஸ் நிர்வாக பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்பு மற்றும் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க, சமூக பொலிஸ் சேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, வடமேல் மாகாணத்துக்கு பொறுப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஜயலத், வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர்.எஸ். கொடித்துவக்கு, சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான மேலதிக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக எம்.டி.ஆர்.எஸ் தமிந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஏ.என். எல் விஜேசேன, மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலிருந்து அநுராதபுரம், பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.





## தடுப்பூசி ஏற்றல்...

நீர்கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வாசிக்கக் கூடிய 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, நீர்கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்று (04) சினோர்ஃபாம் முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது.
(படங்கள் ; ஷாஜஹான்)

## மலர்சாலைக்கு மக்கள் எதிர்ப்பு

■ ஷாஜஹான்



தனியார் மலர்ச்சாலை நிறுவனமொன்று, தனது மலர்ச்சாலை கிளை நிலையத்தை, நீர்கொழும்பு - தலாதூவ பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கு எதிராக, தலாதூவ பிரதேச மக்கள் நேற்று (04) காலை ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நீர்கொழும்பு - தலாதூவ வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், மக்கள் வசிக்கக்கூடிய பிரதேசத்தின் மத்தியில் இதுபோன்ற மலர்ச்சாலைகளை அமைப்பதன் மூலமாகத் தாம் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகுவதாக, அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு, இங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள், பிரதேச வாசிகளுக்கு சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தும் எனவும், பாடசாலை மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இந்த வீதியால் செல்வதற்கு அஞ்சுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான அனுமதியை, நீர்கொழும்பு மாநகர சபை வழங்கியிருப்பதாக தெரிவிக்கும் பிரதேச மக்கள், இந்த மலர்ச்சாலையை உடனடியாக அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இல்லையேல் இதனைவிடப் பாரிய போராட்டம் நடத்தப்படுமெனவும் எச்சரித்தனர்.

### மத்திய மாகாணத்தில் 442 மத்திய நிலையங்களில்

## கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

■ மெய்யன்

மத்திய மாகாணத்தின் 3 மாவட்டங்களிலுள்ள 442 மத்திய நிலையங்களில் இன்று (05) தொடக்கம் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

கொரோனா தொற்றால் 3 மாதங்களுக்கு மேலாக நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ள நிலையில், நிகழ்நிலை (இணைய வழி) கற்றல் செயற்பாடுகள் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், இந்த நிகழ்நிலை கல்விக்கான வாய்ப்பு இல்லாத மாணவர்களை அடிப்படையாக வைத்து, மத்திய மாகாணத்தில் 15 கல்வி வலயங்களிலுள்ள 442 பாடசாலை மத்திய நிலையங்களில் கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின்றன.

குறித்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அல்லாத ஏனைய பாடசாலை மாணவர்களும் எவ்விதப் பிரச்சினையுமின்றி அங்கு கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என்பதாலேயே இவை மத்திய நிலையங்கள் என அழைக்கப்படுவதாகவும் மத்திய மாகாண கல்வி திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மத்திய நிலையங்களில் அதிபர், பொதுச் சுகாதார அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களை அங்கத்தவர்களாக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் மேற்பார்வையில், சுகாதார வழிகாட்டல்களுடன் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### சந்தையில் இனி

## அரிசி விலை குறையும்



சிறுபோக நெற்செய்கையில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டம், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அரிசியின் விலை, எதிர்வரும் வாரங்களில் சந்தையில் குறைவடையும் என்று நெல் கொள்வனவு சபையின் உப-தலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரிசி விலையை முறையாக முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்ப ட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



### சினோர்ஃபாம் தடுப்பூசிகள்

## இலங்கையை வந்தடைந்தன

சீனாவில் தயாரிக்கப்படும் சினோர்ஃபாம் தடுப்பூசிகளில் மேலும் ஒரு மில்லியன் டோஸ்கள், இலங்கைக்கு நேற்று (04) அதிகாலை கொண்டுவரப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதன்படி, நாட்டுக்கு 51 இலட்சம் சினோர்ஃபாம் தடுப்பூசிகள் கிடைக்க பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மணலுக்குள்ளிருந்து முதிரைகள் சிக்கின

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மிகவும் சூட்சுமமான முறையில், மணலுக்குள் புதைத்து கடத்தப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள், பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட முகமாலை பகுதியில் வைத்து நேற்று (04) கைப்பற்றப்பட்டுள்ளன.

மாங்குளம் பகுதியில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தியபோதே, இந்த சூட்சுமக் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான 26 முதிரை குற்றிகள் கைப்பற்றப்பட்டதாக, பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மணலுக்குள் புதைத்து முதிரை மரக்குற்றிகளை கடத்திய டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### வாகன விபத்துகள் அதிகரிப்பு;

## 24 மணி நேரத்தில் 9 பேர் உயிரிழப்பு



பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னரான காலப் பகுதியில் வாகன விபத்துகள் அதிகரித்திருப்பதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நேற்று (04) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளால் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் ஐவர், மோட்டார் சைக்கிள்களின் ஒட்டுநர்கள் என்றும் மூவர் பாதசாரிகள் என்றும், ஒருவர் ஓட்டோவில் பயணித்தவர் என்றும் தெரிவித்தனர்.

சாரதிகளுக்கு ஏற்படும் நித்திரைக் கலக்கம், உடல்நலக் குறைவு, வீதியின் குறைப்பாடுகள் உள்ளிட்டவற்றை கவனத்திற்கொள்ளாமையே வாகன விபத்துகளுக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தனர்.

அத்துடன், வாகன விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற நிலையிலும் விபத்துகளால் தினமும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது துரதிர்ஸ்டமானதெனவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



## தும்பு தீப்பற்றியதில் பல கோடி நட்டம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம், மதுரங்குளி விருதோடை பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான தும்பு ஏற்றுமதித் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (03) ஏற்பட்டிருந்த தீயினால் பல கோடி ரூபாய்க்கும் அதிகமாக இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தொழிற்சாலையில் தீ ஏற்பட்ட போது, அங்கு சுமார் 50 பேர் வேலையில் ஈடுபட்டிருந்துள்ளதோடு, ஏற்றுமதி செய்வதற்கு ஆயத்தமாக பெருமளவிலான தும்பும் களஞ்சியப்படு த்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீயை நீண்ட போராட்டத்துக்குப் பின்னர், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

### எரிபொருள்

## விலையேற்றத்துக்கு ஓட்டுநர்கள் கண்டனம்

### எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர்

■ ரஸீன் ரஸ்மின்



எரிபொருள்களின் விலையேற்றத்தை கண்டித்து , புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் ரத்மல்யாய பிரதேசத்தில், நேற்று (04) ஞா யிற்றுக்கிழமை காலை ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

ஓட்டோ சாரதிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் ஒன்றிணைந்து, கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு, சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எச். எம்.நியாஸ், புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் ரிபாஸ் நஸீர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பினர்.

முன்னாள் போராளிகள் அரசாங்கத்தின்

# ‘கைக்கூலிகளாக இருக்கவேண்டுமா?’

## சாணக்கியன் எம்.பி காட்டம்

■ வா.கிருஸ்ணா

முன்னாள் போராளிகள் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக இருக்கவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு அரசாங்கம் செயற்படுகின்றதா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

முன்னாள் போராளிகளாக இருந்து தமிழினத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள், அரசாங்கத்தின் சுகபோகங்களை அனுபவித்துவரும் நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்களை மீண்டும் கைதுசெய்து சிறையிலடைக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சாடினார்.



நோர்வேயில் இயங்கும் காலையடி உதவும் கரங்கள் அமைப்பால், முன்னாள் போராளியொருவருக்கான தொழில் செய்யும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பு திருப்பழுகாமத்தில் நடைபெற்றது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் கோரிக்கைக்கு அமைவாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், இதனை வழங்கிவைக்கும் நிகழ்வு, ஜனநாயக போராளிகள் கட்சியின் உபதலைவர் நகுலேஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இரா. சாணக்கியன் எம்.பி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, உபகரணத்தை வழங்கிவைத்தார்.

இதன்போது கருத்துரைத்த அவர், “முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்யமுன்வருவது வரவேற்கத்தக்கவிடயம். இன்று ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்களை இந்த அரசாங்கம் இலக்குவைத்து விசாரணை நடத்துவதும் கைதுசெய்வதுமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

“தமிழினத்தின் விடுதலைக்காக போராடி ஜனநாயக பாதையில் அரசியல் செய்யமுன்வந்திருக்கும் உறுப்பினர்களைக் கைதுசெய்வதை வன்மையாக கண்டிப்பதுடன், இந்த அரசாங்கத்தின் மிக கேவலமான செயற்பாடாகவே இது பார்க்கப்படவேண்டும்.

“தயவுசெய்து முன்னாள் போராளிகளைக் கைதுசெய்வதை, பழிவாங்குவதை நிறுத்துங்கள். நீங்கள் யாரையும் கைதுசெய்யவேண்டுமானால் எங்களது போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்களை முதலில் கைதுசெய்து விசாரணை செய்யுங்கள்.

“அவர்கள் இன்று அரசாங்கத்தின் பாதுகாப்புடன், இதுவரையில் புனர்வாழ்வளிக்கப்படாமல் சுற்றித்திரிகின்றனர்” என்றார்.

பூஜைக்கும் எனக்கும் எவ்வித

# ‘தொடர்பும் இல்லை’

■ எஸ்.நிதர்ஷன்

வல்லிபுர ஆழ்வார் கோவிலில், ஜுன் 27ஆம் திகதியன்று நடைபெற்ற பூஜைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென, வல்லிபுர ஆழ்வார் கோவில் புதிய நிர்வாகச் செயலாளர் வேலாயுதம் சிறிஞானசம்பந்தர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில், நேற்று முன்தினம் (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.




இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வல்லிபுர ஆழ்வார் கோவிலின் பழைய நிர்வாகத்தினரின் அத்துமீறிய தலையீட்டில், ஜுன் 27ஆம் திகதியன்று, சுகாதார விதிமுறைகளை மீறி பூஜை இடம்பெற்றதென்றார்.

> சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய, பொதுமக்களின் நன்மை கருதி, மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் சுகாதார நடைமுறையை பின்பற்றி, கோவிலில் பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய, பொதுமக்களின் நன்மை கருதி, மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் சுகாதார நடைமுறையை பின்பற்றி, கோவிலில் பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

தந்தைக்கு உணவு கொண்டு சென்ற

# சகோதரர்கள் படுகாயம்



■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - திருமுறிகண்டி, அக்கராயன் வீதியில், நேற்று முன்தினம் (03) இரவு இடம்பெற்ற விபத்தில், சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

18, 11 வயதுகளையுடைய சகோதரர்கள் இருவரே, இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

6ஆம் கட்டைப் பகுதியில், வீதி புனரமைப்பு பணியில் ஈடுபடும் தமது தந்தைக்கு, பிள்ளைகள் இருவரும், அக்கராயன் - கெங்காதரன் குடியிருப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் உணவு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது, 5ஆம் கட்டைப் பகுதியில் வைத்து, வீதி புனரமைப்புக்காக குவிக்கப்பட்டிருந்த சல்லிக் குவியலில் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயடைந்த 18 வயது இளைஞன், கிளிநொச்சி பொது வைத்தியசாலையிலும் அவரின் சகோதரரான 11 வயதுச் சிறுவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




முல்லைத்தீவில்

# நாளை இரத்த தானம்

■ செ.கீதாஞ்சன்

இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மின்னியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், முல்லைத்தீவு இந்து தமிழ் கலைவன் பாடசாலையில், நாளை (06) காலை 9 மணிக்கு, இரத்த தான முகாமொன்று நடைபெறவுள்ளது.

‘உதிரம் கொடுத்து உயிர் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த இரத்ததான முகாமை, லயன்ஸ் கழகம், சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் பல இணைந்து நடத்தவுள்ளன.

# மாடு மேய்த்தவர் யானை தாக்கி பலி

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாவெட்டை வயற் பிரதேசத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த ஒருவர், காட்டு யானை தாக்கி மரணித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி கிராமத்தைச் சேர்ந்த கந்தன் நாகராசா (வயது 57) என்பவரே, சனிக்கிழமை (03) இவ்வாறு மரணித்துள்ளார்.

சடலம், உடற்கூறாய்வுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டிய காட்டுப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் விவசாய கூலித் தொழிலாளர்கள் மூவர் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## தொழில்நுட்ப வசதி...

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய அதி தீவிர சிகிச்சை பிரிவு, விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வறை, வைத்தியசாலை நூலகம் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சைப் பிரிவு ஆகியன, நேற்று முன்தினம் (03) திறந்துவைக்கப்பட்டுள்ளன. அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில், அக்கரைப்பற்று மாநகர மேயர் அதாஉல்லா அஹமட் ஸகியினால் இவை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன.
(படங்கள் - நூருல் ஹுதா உமர் , எம்.எல்.எஸ்.டீன்)

சௌபாக்கியா வேலைத்திட்டத்தில்

# வெருகலில் கோழி வளர்ப்பு

■ ஏ.எம்.ஏ.பரீட். அ. அச்சுதன்

வெருகல், பூநகர் பிரதேசத்தில் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ், கோழி வளர்ப்பை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு, வெருகல் பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

இதற்காக 100 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக, 82 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் 15,000 கோழிக்குஞ்சுகள் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

கோழிவளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதிக் கடிதத்தை, பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட



ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோரள மற்றும் மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோரள ஆகியோர் வழங்கினர்.

இத்திட்டத்தை சிறப்பாக மேற்கொள்ளும்போது மாதமொன்றுக்கு ரூ.30,000 - ரூ.40,000 இடைப்பட்ட வருமானத்தை பெறமுடியும் என எதிர்பார்க்கின்றது.

வருமானம் குறைந்த மக்கள் அதிகமாக வாழும் இப்பிரதேசத்தில் எவ்வித வேறுபாடின்றி, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு, பிரதேசத்தின் அவிருத்தியை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள்



# காத்தான்குடி தபாலகத்துக்கு பூட்டு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி தபாலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்ற உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து,

மறு அறிவித்தல் வரை காத்தான்குடி தபாலகம் மூடப்பட்டுள்ளது.

காத்தான்குடி தபாலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கடந்த வாரம் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

துறையூர் கடற்கரையில்

# கரையொதுங்கிய ஆமை

■ எஸ்.நிதர்ஷன்

வேலணை - துறையூர் கடற்கரையில், நேற்று (04) அதிகாலை , இறந்த நிலையில் கடலாமையொன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று அதிகாலை, தொழிலுக்குச் சென்ற மீனவர்கள், கரை ஒதுங்கிய கடலாமையை இனங்கண்டு, வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்தனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்த நிலையில், அதன் பின்னர் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்ச்சியாக உயிரிழந்து ஒதுங்கி வருகின்றன.

இதுவரையில், தீவகப் பகுதிகளில், ஒரு திமிங்கலம், ஒரு டொல்பின் மற்றும் மூன்று கடலாமைகள் என்பன கரை ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ‘முள்ளியவளை வேண்டாம்; முல்லைத்தீவே வேண்டும்’

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவின் தீர்த்தக்கரை, சிலாவத்தை ஆகிய பகுதிகளில் இருந்து வரிகளை செலுத்துபவர்கள், முள்ளியவளை பிரதேச சபையின் உப பணிமனைக்குச் சென்று வருவதாகத் தெரிவித்த கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி இமக்குலேற்றா புஸ்பானந்தன், இதனால், அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தீர்த்தக்கரை, சிலாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் முள்ளியவளைக்குச் செல்லாமல், முல்லைத்தீவு நகரில் உள்ள கரைதுறைபற்று பிரதேச சபையின் தலைமையகத்தில் வரிகளைச் செலுத்தலாமென்றார்.

கொரோனா காரணமாக முள்ளியவளைக்குச் சென்று வருவதில் நெருக்கடிகள் இருப்பதாக, தீர்த்தக்கரை, சிலாவத்தை பகுதி மக்கள் தன்னிடம் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வருகின்றனரென்றும், அவர் கூறினார்.

தொலைக்கல்வி வள நிலைய

# கற்றல் நடவடிக்கை இன்று ஆரம்பம்

■ வி.ரி.சகாதேவராஜா

கொவிட் 19 தொற்றுக் காரணமாக கல்வி அமைச்சால் தற்போது தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன்படி, சம்மாந்துறை வலயத்தில் 16 பாடசாலைகள் தொலைக்கல்வி வள நிலையங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன .

குறித்த 16 வள நிலையங்களும் இன்று (05) காலை 7.30 மணிக்கு தமது பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கின்றன என சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல்நஜீம் தெரிவித்தார். சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி, அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி,



துணுக்காயில் குடிநீர் நெருக்கடி;

# ‘பிரதேச செயலகத்தால் குடிநீர் வழங்கவும்’

■ நடராஜா கிருஸ்ணகுமார்

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம், இந்நிலையில் குடிநீர் விநியோகத்தை பிரதேச செயலகம் மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அமைதிபுரம், புத்துவெட்டுவான் போன்ற நீண்ட தூர கிராமங்களுக்குச் சென்று குடிநீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இந்நிலையில், இவ்வாறான கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான வாகன வசதி பிரதேச சபையிடம் இல்லையென்றும் கூறினார்.

இந்நிலையில், துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஊடாக, மேற்படி கிராமங்களுக்கான குடிநீர் விநியோகித்தை மேற்கொள்ளமாறு, பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும், அமிர்தலிங்கம் தெரிவித்தார்.



மாத்தளை மாவட்டத்தில் 2 வருடங்களில்

# 5,939 பலா மரங்கள் வெட்டப்பட்டுள்ளன

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 5,939 பலா மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட செயலாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களுக்கு அமைய, 2019ஆம் ஆண்டு 3,346 பலாமரங்களும் கடந்தாண்டு 2,593 மரங்களும் தறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2019ஆம் ஆண்டு உக்குவளை பிரதேச செயலகப் பிரிவில் 755 பலா மரங்களும், இரத்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் 652 பலா மரங்களும், யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவில் 316 பலா மரங்களும், பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவில் 253 பலா மரங்களும், கலேவல பிரதேச செயலகப் பிரிவில் 183 பலா மரங்களும், தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவில் 18 பலா மரங்களும் வெட்டப்பட்டுள்ளன.

அதிகமாக மாத்தளை செயலகப் பிரிவிலேயே பலா மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வில்கமுவ பிரதேச செலயகப் பிரிவில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான 12 மரங்களே வெட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்தாண்டு மாத்தளை செயலகப் பிரிவிலேயே அதிக பலா மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய, 592 மரங்கள் வெட்டப்பட்டுள்ளதுடன், மிகக் குறைந்த எண்ணிக்கையாக லக்கல பிரதேச செயலகப் பிரிவில் 7 பலா மரங்களே வெட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாரம்பரிய இரத்தினக்கல் அகழ்வுக்கு

# இடமளிக்குமாறு வேண்டுகோள்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில் பாரம்பரிய முறையில் இரத்தினக்கல் அகழ்வதற்கு இடமளிக்குமாறு, பிரதேச இரத்தினக்கல் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றதுடன், குறிப்பாக கொரோனாவால் மேலும் பாரதூரமான நிலையை அடைந்துள்ளனர்.

வசதிபடைத்தோர் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி பாரிய சுற்றாடல் அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கையில், ஏழைத் தொழிலாளர்கள் காட்டுப் பகுதிகளில் இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினர் அவர்களை கைது செய்து, அபராதம் விதிக்கின்றனர் என இரத்தினக்கல் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அபராதத்தைச் செலுத்த முடியாத போது வேறு தண்டனைகளுக்கு தாம் உள்ளாக்கப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, வசதி படைத்தவர்கள் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி இரத்தினக்கல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படுவது போன்று தமக்கும் சந்தர்ப்பத்தை வழங்குமாறு, இப்பிரதேச அரசியல் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரிடம் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# அமரர் கனகசபைக்கு கௌரவம்

■ எம். கிருஸ்ணா

தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொத்மலை பிரதேச அமைப்பாளர்களில் ஒருவரும் கொத்மலை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான அமரர் சின்னையா கனகசபைக்கு, தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொடிபோர்த்தப்பட்டு கௌரவம் அளிக்கப்பட்டது.

சங்கத்தின் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார், கட்சியின் பிரதி நிதிச் செயலாளர் சோ.ஸ்ரீதரன் உள்ளிட்டவர்கள் இறம்பொடை வெவண்டன் தோட்டத்துக்குச் சென்று, அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், கட்சியின் கொடியை பூதவுடலுக்குப் போர்த்திக் கௌரவித்தனர்.



அந்தோனிமலை தோட்ட வீதி

# புனரமைப்பு பணிகள் நிறைவடையும் தறுவாயில்





■ சுதத்.எச்.எம்.ஹேவா

பாரியளவில் சேதமடைந்திருந்த ஹட்டன்- அந்தோனிமலை தோட்ட வீதி, புனரமைப்புப் பணிகள் நிறைவுக் கட்டத்துக்கு வந்துள்ளன.

மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல், குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதியால் மக்கள் பெரிதும் இன்னல்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், அரசாங்கத்தின் ஆயிரம் வீதிகளைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கைக்கமைய, குறித்த வீதி புனரமைக்கப்பட்டு, காபட் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.







# வயலில் இறங்கிப் போராட்டம்

உரம் வழங்குமாறும் எரிபொருள் விலையைக் குறைக்குமாறும் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்குமாறும் தெரிவித்து, தெல்தோட்டை பிரதேச சபைக்குட்பட்ட நவநெலியகம பகுதியில், வயலில் இறங்கி பிரதேசவாசிகள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதில் ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் சாந்தினி கோங்கஹகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படங்கள் – நவி)

# நுவரெலியா– டயகம பஸ் சேவை

# 'இன்று வழமைக்கு திரும்பும்'


■ டி.சந்ரு

நுவரெலியாவிலிருந்து நானுஓயா- டெஸ்போர்ட் வழியாக டயகம வரை பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், கடந்த 10 நாள்களாக சேவையில் ஈடுபடாமையால் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக அக்கரப்பத்தனை, பசுமலை போன்ற பிரதேசங்களில் உள்ள மக்கள், நுவரெலியா வைத்தியசாலைக்கும், நீதிமன்ற நடவடிக்கைகள் உள்ளிட்ட தேவைகளுக்கு செல்வதில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் நுவரெலியா டிப்போ பொறுப்பதிகாரியிடம் வினவியபோது, இச்சேவை இன்றிலிருந்து (05) ஆரம்பமாகும் என்றும், கடந்த வாரங்களில் பஸ் சேவைக்காக அரசாங்கத்தால் நிதி வழங்கப்படாத நிலையில், இப்போது அப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதென்றார்.

# வேவர்லியில் சிறுத்தையின் சடலம் மீட்பு



■ எஸ்.கணேசன்

மக்கள் வழங்கிய தகவல்களை அடுத்து, டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேவர்லி தோட்டத்தை அண்மித்த ஆக்ரோயா ஆற்றோரத்தில் சுமார் மூன்று அடி சிறுத்தையின் சடலமொன்று நேற்று (04) மீட்கப்பட்டுள்ளது என டயகம பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுத்தையின் சடலத்தில் காயங்கள் காணப்படுகின்றன என்பதுடன் அந்த சடலத்தை நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், சிறுத்தையின் மரணம் தொடர்பில் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

திருட்டுகளில் ஈடுபட்ட

# தந்தையும் மகன்களும் கைது

## துப்பாக்கி ரவைகளும் மீட்பு

■ எஸ். ஆராச்சி

கித்துல்கல, கித்துல்கலையை அண்மித்த பல பிரதேசங்களில் இடம்பெற்ற 12 திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், கித்துல்கல பொலிஸாரால் நேற்று முன்தினம் (3) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

50 வயதுடைய தந்தையும் அவரது 24, 27 ஆகிய வயதுகளையுடைய இரண்டு மகன்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கமைய, சந்தேகநபர்களின் வீட்டுக்கு அருகிலிருந்து ரி.56 ரகத் துப்பாக்கி ரவைகள் 94 மற்றும் 84 எஸ்.ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 48 ரவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



கலபொட தோட்டத்தில்

# சேதன மிளகாய் உற்பத்திக்கு கடனுதவி

■ இரா. யோகேசன், ரஞ்சித் ராஜபக்ஸ

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் இலக்கு' கொள்கைத் திட்டத்தின் கீழ், பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் நாவலப்பிட்டி, கலபொட தோட்டத்தில் வசிக்கும் 100 இளைஞர்களின் ஒத்துழைப்புடன், சேதன பசளை மிளகாய் உற்பத்தி செய்கைத் திட்டம், விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயால் நேற்று முன்தினம் (04) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், தோட்டங்களில் தேயிலை பயிரிடப்படாத இடங்களில் இளைஞர்களுக்கு தலா 80 பேர்ச்சஸ் காணி ஒப்பந்தம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இளைஞர்களால் கலபொட தோட்டத்தில் தயாரிக்கப்படும் சேதனப் பசளையைப் பயன்படுத்தி இந்த மிளகாய் உற்பத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் இரண்டாவது கட்டமாக குறித்த தோட்டத்தில் வசிக்கும் மேலும் 50 இளைஞர்களுக்கு சேதன மிளகாய் உற்பத்திக்காக ஒப்பந்தம் வழங்கப்படவுள்ளதுடன், மிளகாய் உற்பத்தியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு 50,000 ரூபாய் கடன் தொகையும் வழங்கப்படவுள்ளதுடன், இதற்கான நீர் வசதியும் இலவசமாக விவசாயத்துறை அமைச்சரால் வழங்கப்படவுள்ளது.



# சகாராதெனிய தோட்டம் முடக்கம்

■ சேஹ்ன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிவ்வாவல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட சகாராதெனிய தோட்டம், நேற்று (04) காலை தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் 100 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 54 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே, இப்பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புர பொருளாதார மத்திய நிலையத்தில் பணிபுரியும் ஒருவர், தனது வீட்டிலேயே உயிரிழந்த நிலையில், அவருடன் நெருங்கிப் பழகிய பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள 4 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், அங்கு பணிபுரிபவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# உலக சுகாதார அமைப்பின் எச்சரிக்கைக்குச் செவி சாய்ப்போம்

கொரோனா கொத்தணிகள் உருவாகாவிடினும், வகைகள் கொஞ்சம் கொஞ்சமாக நீண்டுகொண்டே செல்கின்றன. அந்த வரிசையில், இறுதியாக 'டெல்டா பிளஸ்' சேர்ந்துகொண்டுள்ளது. அதற்கு முன்னர், ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா ஆகியன இணைந்திருந்தன.

கொரோனா பிறழ்வுகளின் வகைகள், இன்னும் எத்தனை, இனங்காணப்படவேண்டி இருக்கின்றன என்பதற்கெல்லாம் பதிலுரைக்க முடியாது. எனினும், உலக சுகாதார அமைப்பு விடுக்கும் எச்சரிக்கைக்குச் செவிசாய்ப்பது தலையாய கடப்பாடாகும்.

கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால், இதன் தீவிரத்தைக் கணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாக, அவ்வமைப்பே தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இன்னும் சில நாடுகள், தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளன; சில நாடுகள், தளர்வைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தவும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாட்டை நீடிக்கவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப்படுதல் அதிகரித்துள்ளது. கொழும்புக்கு வெளியேயும் ஒருசிலர் இனங்காணப்பட்டுள்ளனர்.

திருத்தப்பட்ட தளர்வில், உணவு விடுதிகள், ஸ்பாக்கள், ஆகியன திறந்துவிடப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களிலும் ஒருவரின் தேவைக்கு, மற்றொருவரின் சேவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. சட்டவிரோதமாக இயங்கும் ஸ்பாக்களின் சேவைகள், அதற்கு அப்பாலும் செல்லகின்றன. ஆகையால், இவ்விரண்டையும் திறக்காமல் இருந்திருக்கலாம்.

'துணிக்கடை கொத்தணி' உருவாகுமென எச்சரிக்கப்பட்டாலும் அவ்வாறான கடைகள், பிரதான நகரங்களில் திறந்துள்ளன. ஒவ்வொன்றும் இயங்க வேண்டும்; பாதுகாப்பு வழிகாட்டல்களைப் நுகர்வோர் பின்பற்றுவது நூற்றுக்கு நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்நாள்களில் பரவுகின்ற நோயின் தாக்கம், இன்னுமொரு மாதத்தில், தெரியவருமெனத் தெரிவித்துள்ள இலங்கை வைத்திய சங்கம், ஒரு மாதத்துக்குப் பின்னரே பெறுபேற்றைக் காணமுடியுமென எதிர்வு கூறியுள்ளது. ஆகமொத்தத்தில், இன்னுமொரு மாதத்துக்குப் பின்னரே, தொற்றாளர்களின் எண்ணிக்கையை சரியாகக் கணிப்பிட்டுக் கூறமுடியும்.

எச்சரிக்கை பல விடுக்கப்பட்டாலும் பெரும்பாலான மக்களிடத்தில் இன்னுமே விழிப்புணர்வு இல்லையென்பது கவலையளிக்கிறது. "நாங்கள், எங்கே செல்கின்றோம்? வீட்டுக்குள்ளே தானே இருக்கின்றோம்; சென்றாலும் சட்டென வீட்டுக்குத் திரும்பிவிடுகின்றோம்" என வீராப்புப் பேசிக்கொண்டிருப்போரும் இல்லாமல் இல்லை.

ஆனால், இவ்வாண்டு செப்டெம்பர் மாதத்துக்குள், அதாவது இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தபட்சம் 10 சதவீத மக்களாவது கொரோனா தடுப்பூசி செலுத்தியிருப்பதை உலக நாடுகளின் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டுமென உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

ஆகையால், தடுப்பூசி செலுத்தலை விரைவுபடுத்த வேண்டும், மேல்மாகாணத்தைச் சேர்ந்த 30 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு முதலாவது தடுப்பூசியை செலுத்தும் செயற்பாட்டை இலங்கை இராணுவம், ஆரம்பித்திருப்பதை வரவேற்க வேண்டும். இக்காலப்பகுதியில் தடுப்பூசியை செலுத்திக்கொள்வதே உசிதமானதாகும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சொர்க்கத்தை நாங்கள் கண்டதில்லை. ஆனால், கடவுள் வந்து, சொர்க்கத்தைப் பற்றிக் கனவு காண்பவர்களிடம், "இந்த உலக வாழ்க்கை வேண்டாம்; சொர்க்கத்துக்கு வந்து விடுங்கள்" எனக் கேட்டாலும், எவரும் சென்றுவிட மாட்டார்கள். "நாங்கள் இயற்கையாக இறக்கும் போது, எங்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றுதான் சொல்வார்கள்.

இந்த உலகமே வியத்தகு அழகானது அல்லவா? இயற்கை அழகு மட்டுமல்ல; செயற்கையாகவும் உலகை அழகாபுரியாக மாற்றிவிட்டார்கள். எம்மவர்களுக்கு தாய் மண்ணைவிட, வெளிநாடுகளுக்குச் செல்வதே சொர்க்கமானது எனச் சொல்கிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு நாட்டுக்கும் பல்வேறு பெருமைகள் உண்டு. நமது தேசம் எமக்குப் பெருமை.

மேல் உலகத்தில் தேவர்களின் பக்கத்தில் இருந்து வாழ்தல் களிப்பானது என எண்ணியபடி, உழைப்பே இல்லாமல் சும்மா வாழும் இடம் எதுவெனத் தேடுபவர்கள் பற்றி என்ன சொல்ல முடியும்? வீணான கற்பனைத் தேடல்களை விடுத்து, நிஜத்துக்குள் பிரவேசியுங்கள் மக்களே!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# பெரும் சாபக்கேடுகள்



என்.கே. அஷோக்பரன்

'சிங்கப்பூரின் சிற்பி' லீ க்வான் யூவின் நேர்காணல்கள் அடங்கிய நூலொன்று 1998இல் வெளியானது. அதில், லீ க்வான் யூ, இலங்கை பற்றிப் பேசியிருக்கும் விடயமும் பதிவாகியிருக்கிறது.

'எங்கள் செயல்களின் விளைவுகளுடன் நாம் வாழ வேண்டியிருக்கிறது. எங்கள் சொந்த மக்களுக்கு நாங்கள் பொறுப்பு. அவர்களுக்காகச் சரியான முடிவுகளை எடுக்கிறோம். நீங்கள் பழைய பிலிப்பைன்ஸைப் பாருங்கள். பழைய இலங்கையைப் பாருங்கள். பழைய கிழக்கு பாகிஸ்தான் மற்றும் பலவற்றைப் பாருங்கள். நான் இந்த நாடுகளுக்கும் இடங்களுக்கும் சென்றிருக்கிறேன். 1956 ஆம் ஆண்டில், நான் முதன்முறையாக கொழும்புக்குச் சென்றபோது, அது சிங்கப்பூரை விடச் சிறந்த நகரமாக இருந்தது. ஏனெனில், சிங்கப்பூர் மூன்றரை ஆண்டுகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பில் இருந்தது. கொழும்பு மவுண்ட்பட்டனில், தென்கிழக்கு ஆசியா கட்டளையின் மையம் அல்லது தலைமையகமாக இருந்தது. அவர்களிடம் ஸ்டெர்லிங் (அந்நியச் செலாவணி) கையிருப்பு இருந்தது. அவர்களிடம் இரண்டு பல்கலைக்கழகங்கள் இருந்தன. போருக்கு முன்பு, படித்த திறமைகளின் அடர்த்தியான அடுக்கு இருந்தது. எனவே, அமெரிக்க தாராளவாதிகள் அல்லது பிரிட்டிஷ் தாராளவாதிகள் சொன்னதன் படி, அது செழித்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்பது, சிறுபான்மை தமிழர்கள் மீது, சிங்களப் பெரும்பான்மையின ஆதிக்கத்துக்கு வழிவகுத்தது. அது தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும் உழைத்த புத்திசாலித்தனமான தமிழர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது போலானது. மேலும் ஆங்கிலம் வெளியேற்றப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்திலேதான் கல்வி கற்றனர். சிங்களம் உட்கொண்டுவரப்பட்டது. அவர்களுக்கு இரண்டு பல்கலைக்கழகங்களில் ஒதுக்கீடு முறையில் இடம் கிடைத்தது. இப்போது அவர்கள் வெறித்தனமான புலிகளாக மாறிவிட்டனர். மேலும், நாடு மீண்டும் ஒருபோதும் ஒன்றிணைக்கப்படாத நிலை ஏற்பட்டுவிட்டது. யாராவது அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டும் - அமைப்பை மாற்றவும், தளர்த்தவும் அல்லது முறித்துக் கொள்ளவும். அவர்கள் பலவீனமான அல்லது தவறான தலைவர்களைக் கொண்டிருந்ததால் அவர்கள் தோல்வியடைந்தனர்' என்று லீ க்வான் யூ இலங்கை பற்றிச் சொன்னதைக் அந்தப் புத்தகத்தில் பதிவுசெய்திருக்கிறார்கள்.

லீ க்வான் யூ சொன்னவற்றில் நான்கு விடயங்கள் இன்றும் பொருத்தப்பாடு உள்ளனவாகவே இருக்கின்றன.

முதலாவது, இலங்கையின் இனவாத, அல்லது இன-மைய அரசியல், இலங்கையின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் முன்னெற்றத்துக்கும் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்பதுடன் மூளைசாலிகளின் வெளியேற்றத்துக்கும் வழிவகுத்தது. இலங்கையின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் உதவியிருக்கக்கூடிய இந்த மூளைகள், வளர்ந்த நாடுகளை வளர்ப்பதற்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இரண்டாவது, இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு பற்றியது. சர்வதேசத்தில் கேள்வி நிறைந்த பொருட்களின் உற்பத்தியால் ஏற்பட்ட ஏற்றுமதிகளின் விளைவால், அந்நியச் செலாவணி கையிருப்பைக் கொண்ட நாடாக இலங்கை இருந்தது. இன்று அந்நியச் செலாவணி கையிருப்புத் தீர்ந்து போய், வங்குரோத்தாகும் நிலையில் இலங்கை நின்று கொண்டிருக்கிறது.

மூன்றாவது, அன்றே, பெரும் பல்கலைக்கழகத்தைக் கொண்டு அறிவுச் சமூகமாக வளர்ந்துகொண்டிருந்தது இலங்கை. இன்று, உலகத் தரவரிசையில் முதல் ஆயிரத்துக்குள் கூட இலங்கையின் ஒரு பல்கலைக்கழகமும் இல்லை என்ற நிலையில்தான் இலங்கையின் உயர்கல்வித் தரம் இருக்கிறது.

நான்காவது, இலங்கையின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது, பலவீனமானதும் தவறான தலைமைகளைக் கொண்டிருந்ததுமாகும்.

இயற்கை வளம் நிறைந்த பூமி; கடல் வளம், கனிம வளம், மண் வளம், மலை வளம், நீர் வளம், மழை வளம், இயற்கைக் காடுகள், அருமையான சுவாத்தியம் என இயற்கை ஆசீர்வதித்த தீவு இலங்கை என்று சொன்னால் அது மிகையல்ல.

ஆனால், 'சுதந்திரம் அடைந்து' 73 ஆண்டுகள் கடந்து, இன்று நாடு வங்குரோத்தாகும் நிலையில் நிற்கிறதென்றால் அதற்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால் இந்தத் தீவின் இந்த நிலைக்கு, இந்தத் தீவில் வாழும் மக்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் பொறுப்பாளிகள் ஆகிறார்கள்.

ஆனால், இந்தத் தீவின் பெரும் சாபக்கேடு, இந்தத் தீவுக்கு அமைந்த தலைமைகள். அவர்களைத் தலைமைகள் என்று விளிப்பதுகூட தலைமைத்துவத்தைக் கேவலப்படுத்துவதாகவேதான் அமையும்.

ஒரு வேளை, இந்நாட்டின் தலைமைகள் இனவாத அல்லது இன-மைய அரசியலை முன்னெடுக்காது, நாட்டைச் சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை, சுதந்திரகாலம் முதல் மேற்கொண்டிருந்தால், இன்று இலங்கையின் நிலை வேறானதாக இருந்திருக்கும்.

ஆனால், தாம் அதிகாரத்துக்கு வந்துவிட வேண்டும்; அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, இனவாத அரசியல் எனும் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்து, இன்று முழுநாட்டையும் தோல்வியடையும் அரசாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசியலின் பெரும் சாபக்கேடு எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவுடன் ஆரம்பிக்கிறது. தான் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற சுயநலத்தில், பெரும்பான்மை இனத்தேசியவாத அரசியலுக்கு, அரசியலரங்கின் முன்வரிசையில் ஆசனமிட்டுக்கொடுத்த பண்டாரநாயக்க, இந்நாட்டின் தலைவிதியை மாற்றியெழுதினார். இவர்கள் செய்த அரசியலின் விளைவு, அவரின் இரண்டாம் தலைமுறை கூட, இந்நாட்டில் வாழாது, வளர்ந்த நாட்டுக்குக் குடிபெயர்ந்து வாழ்கிறது.

தங்கள் வாரிசுகளுக்கு வெளிநாட்டு வாழ்க்கை எனும் மாற்றுத்திட்டத்தை வைத்துக்கொண்டு, இந்நாட்டை தமது சுயநல அரசியலுக்கும், அதிகார வேட்கைக்குமாக சீரழித்துவிடும் அரசியல் தலைமைகள்தான் இந்நாட்டின் சாபக்கேடு. உன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கூட வாழாத, வாழ விரும்பாத நாட்டுக்கு, நீ தலைவன் என்பது எவ்வளவு பெரிய வெட்கக்கேடு!

என்றோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், யாரோ சில மன்னர்கள் இந்தத் தீவை இப்படி ஆண்டார்கள் என்ற பழங்கதைகளையும் பிரசாரங்களையும் வைத்துக்கொண்டு, 21ஆம் நூற்றாண்டில் இந்தத் தீவின் அரசியலை முன்னெடுப்பதெல்லாம் அபத்தத்தின் அபத்தம்.

மனித குலம் முன்னோக்கிச் செல்வதைப் பற்றி சிந்திக்கையில், இந்தத் தீவின் தலைமைகள் பின்னோக்கிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தமது சுயநல அரசியலுக்காகவும் அதிகார வேட்கைக்காகவும் அப்பாவி மக்களிடம் மற்றையவர்கள் என்ற அடையாளப்படுத்தப்படுவோர் மீதான வெறுப்பையும் துவேசத்தையும் காழ்ப்புணர்வையும் பாதுகாப்பின்மை உணர்வையும் விதைத்து, தமக்கான வாக்குகளை அறுவடை செய்கிறார்கள்.

ஆனால், இவையெல்லாம் இந்த நாட்டையும், சமூகத்தையும், அரசியலையும் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிருந்து அழுகச் செய்துகொண்டிருக்கிறன என்பதை மக்கள் உணர்வதாகவும் தெரியவில்லை. இந்த அரசியல் தலைமைகள், இவற்றை அறிந்திருந்தும், இவை பற்றிக் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை.

தன்னுடைய மக்களிடையே அச்சம், சந்தேகம், வெறுப்பு, துவேசம் ஆகியவற்றை வளர்த்துவிடும் தலைமைகள் ஆளும் நாடு, ஒருபோதும் வளர்ச்சிப் பாதையில் செல்லாது. எத்தகைய வளம் மிக்க நாடாயினும், இதுபோன்ற அரசியல், அந்நாட்டை சீரழித்து, சின்னாபின்னமாக்கிவிடும். இந்த வளம் மிக்க தீவுக்கும் இதுதான் நடந்துகொண்டிருக்கிறது.

வங்குரோத்து நிலையின் எல்லைக்கோட்டில் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் கூட, இந்தத் தீவின் மக்கள் இங்கு நடந்துகொண்டிருக்கும் அரசியலின் அபத்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்றால், இந்தத் தீவுக்கு ஒருபோதும் விமோசனம் என்பது கிடையாது.

வங்குரோத்து நிலைக்கு ஒரு நாட்டைக் கொண்டு வந்த பின்னர், பழங்கதைகளும் போலி இனப் பெருமைகளும் யாருக்கு என்ன நன்மையைத் தரப்போகிறது?

ஒரு கணமேனும், இந்நாட்டை ஆண்ட ஒரு தலைமையேனும் ஆக்கபூர்வமாகச் சிந்தித்திருந்தால், மக்களிடையேயான வெறுப்பையும் துவேசத்தையும் கசப்பையும் காழ்ப்புணர்வையும் இன-மத அடைப்படைகளில் வளர்த்துவிடும் அரசியல் எல்லாருக்கும் ஆபத்தானது; அது எல்லாருக்கும் அழிவையும், நாசத்தையுமே ஏற்படுத்தும் என்ற யதார்த்தத்தை உணர்ந்திருந்தால், தமது சுயநலத்தைத்தாண்டி அந்த யதார்த்தத்தை சுவீகரித்திருந்தால் இந்நாட்டுக்கு ஒரு புதிய வசந்தத்தின் தொடக்கமாக அது அமைந்திருந்திருக்கும்.

ஆனால் இந்நாட்டின் சாபக்கேடு, இதுநாள் வரை அப்படி யோசிக்கும், செயற்படும் தலைமைகள் இந்தத் தீவுக்கு அமையவில்லை. மாறாக நான் "இந்த இனத்தவன்", "இந்த மதத்தவன்" என்று வெற்றுப் பெருமை பேசும் தலைமைகள்தான் இங்கு அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இந்த நாட்டின் ஆன்மாவை சீரழித்துக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் இந்நாட்டின் பெரும் பெரும் சாபக்கேடு. இந்நாட்டு மக்கள் இதனைப் புரிந்துகொள்ளும் வரையில், இதற்கு சாப விமோசனம் கிட்டாது.

## கடிதங்கள்

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்

### சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் தமது தொழிற்சங்கத்துக்கு ஊடாக சம்பள அதிகரிப்பை கோரி இருக்கிறார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்துச் செலவும் வாழ்க்கைச் செலவும் தாக்குப் பிடிக்க முடியாதளவு மிகவும் மோசமாக அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெருமளவான உத்தியோகத்தர்கள், இவ்வுத்தியோகத்தின் பிரதிபலனாக கிடைக்கும் சம்பளத்தை மாத்திரமே நம்பி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆரம்ப மற்றும் இடைநிலை உத்தியோகத்தர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கும் நிலையில், இவ்வரும்படியைக் கொண்டு, சாதாரணமாக 04 அல்லது 05 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார அடிப்படை அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, வைத்திய தேவைகளுக்கும், பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்கும் போதாமல் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் எரிபொருள் விலையேற்றமானது, தம்மை மேலும் பாதிப்படையச் செய்துள்ளதாகவும், இவற்றைக் கருத்திற்கொண்டு ஆரம்ப மற்றும் இடைத்தர உத்தியோகத்தர்களின் சம்பளத்தை மேலும் 50சத வீதத்தால் அதிகரிக்குமபடியும், சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கிடையில், விரைவாக ரூபா 10,000/=முதல் ரூபா 15,000/= வரையான இடைக்காலக் கொடுப்பனவொன்றையும் வழங்க ஏற்பாடுகளை செய்துதருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கே.எல்.ரி. யுதாஜித்




# தொடர்ந்து அச்சில் ஏறும் ரூபாய்

ச.சேகர்

பத்து நாள்களுக்குள் இலங்கை அரசாங்கம் வரலாற்றுச் சாதனையாக ரூ. 231.5 பில்லியனை அச்சிட்டுள்ளது. ஏல விற்பனையின் போது திறைசேரி பத்திரங்கள் விற்பனையாகாததன் காரணமாக, அவற்றை கொள்வனவு செய்வதற்காக இந்தப் பணம் அச்சிடப்பட்டிருந்தது. இவ்வாறு ரூபாய் அச்சிடப்படுவது இந்த ஆண்டில் முதன் முறையாக இடம்பெறவில்லை என்பதுடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தொடர்பில் பொருளாதார வல்லுநர்கள் கடும் எச்சரிக்கையையும் அதிருப்தியையும் வெளியிட்டிருந்ததையும் காண முடிந்தது.

அண்மைக் காலமாக நவீன நாணயக் கொள்கையை பின்பற்றியதாக அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை நகர்வதை காண முடிகின்றது. குறிப்பாக, நவீன நாணயக் கொள்கை என்பது, இலங்கை மத்திய வங்கியினூடாக நாணயம் அச்சிடப்பட்டு, அரசாங்கத்தின் செலவீனங்களுக்கும் வரவு செலவுகளுக்கும் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நகர்வு கட்டுப்பாடற்ற வகையில் மேற்கொள்ளப்படுமாயின், கட்டுக்கடங்காத பணவீக்கத்துக்கு நாடு முகங்கொடுக்க நேரிடும் என்பதே பொருளாதார வல்லுநர்களின் ஏகோபித்த கருத்தாக அமைந்துள்ளது.

பணவீக்கத்தை நோக்கி நகராத வரையில், அரசாங்கம் போதியளவு பணத்தை அச்சிட்டு அதனை பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை நவீன நாணக் கொள்கை குறிக்கின்றது. பணவீக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு குறைந்தளவில் செலவுகளை மேற்கொள்வது மற்றும் வரி விதிப்புகளினூடாக பொருளாதாரத்திலிருந்து பணத்தை நீக்கிக் கொள்வது என்பதை இந்த நவீன நாணயக் கொள்கை தெரிவிக்கின்றது. இவ்வாறு புதிய நாணயம் பொருளாதாரத்தில் புழக்கத்துக்கு வந்த பின்னர், அதனை ஈடுசெய்யும் வகையில் போதியளவு பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்க முடியாமல் போகும் போது நாட்டில் பிரச்சனை தலைதூக்க ஆரம்பிக்கும்.
1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சிம்பாப்வே நாட்டிலும் இவ்வாறான நிலை ஏற்பட்டது. ரொபர்ட் முகாபேயின் ஆட்சி காலப்பகுதியில், அளவுக்கதிகமாக சிம்பாப்வே டொலர் அச்சிடப்பட்டது. அந்நாடும் இலங்கையைப் போன்று விவசாயத்தில் பெருமளவு தங்கியிருந்த நிலையில், வெள்ளை இனத்தவர்களிடமிருந்து விவசாய நிலங்களை அபகரித்து, அவற்றை தமக்காக ஆதரவளித்த படைவீரர்களிடம் ஒப்படைத்து, விவசாயத்தில் அவர்கள் போதியளவு அனுபவம் கொண்டிராமையினால் விவசாயத்துறையில் திடீரென ஏற்பட்ட சரிவு காரணமாக, அந்நாட்டின் பண வீக்கம் என்பது மிகவும் மோசமான நிலையை எதிர்கொண்டது.

இலங்கையிலும், தற்போதைய அரசாங்கம் தமது செலவீனத்தை ஈடு செய்வதற்கு வங்கிப் பணத்தை பெருமளவில் பயன்படுத்தியுள்ளது. 2020 ஆம் ஆண்டில், வங்கித் துறையிடமிருந்து 1,753 பில்லியன் ரூபாயை கடனாகப் பெற்றது. இதில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து மாத்திரம் ரூ. 506 பில்லியன் பெறப்பட்டிருந்தது. நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் இவ்வாறு பாரியளவு நிதித் தொகை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்டமை இதுவே முதன் முறையாகும். குறிப்பாக மூன்று தசாப்த கால யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கூட இவ்வாறாதொரு உயர் தொகை மத்திய வங்கியிடமிருந்து அரசாங்கம் பெறவில்லை.
2020 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூ. 1,781 பில்லியனை அரசாங்கம் அச்சிட்டிருந்தது. இந்த 98 சதவீத அதிகரிப்புக்கு அரசாங்கம் பொறுப்பாகும். 2021ஆம் ஆண்டிலும் இந்த போக்கு தொடர்வதை காண முடிகின்றது. அரசாங்கத்தின் வருமான மூலங்களை இது விஞ்சியுள்ளதுடன், வெளிநாடுகளிலிருந்து போதியளவு கடன் பெற்றுக் கொள்ள முடியாத நிலையையும் வெளிப்படுத்தியுள்ளது. கொவிட்-19 தொற்றுப் பரவலுடனான தொடர்ச்சியாக முடக்க நிலைகள், பயணக் கட்டுப்பாடுகள் போன்றவற்றால் நாட்டின் பொருளாதார நிலை நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், நாளாந்தம் மக்களின் வாழ்க்கைச் செலவுகளும் அதிகரித்துச் செல்வதால், ஏற்கனவே கொந்தளித்து, சுமையை தாங்கிக் கொள்ள முடியாது தவிக்கும் சாதாரண பொது மக்களின் மீது மேலும் வரிச் சுமையை சுமத்தும் நிலைக்கு அரசாங்கம் நகரவில்லை.
இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் தேர்தல் ஒன்று இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் காணப்படும் நிலையில், மக்கள் மத்தியில் அமோக ஆதரவுடன் ஆட்சிபீடமேறிய இந்த அரசாங்கம், இவ்வாறாதொரு தீர்க்கமான நெருக்கடியான காலப்பகுதியில் புதிய வரி விதிப்புகளை விதித்து, வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சிக் கொள்ளாது என எதிர்பார்க்கலாம். இந்த நிலையில் அரசாங்கத்துக்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்கும், தனது வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் செலவீனங்களை ஈடு செய்து கொள்வதற்கும், வரிப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக, இவ்வாறு பணத்தை அச்சிட்டு, தமது தேவையை பூர்த்தி செய்து கொள்ள முனைவதை காண முடிகின்றது. இவ்வாறு அச்சிடப்படும் பணத்தைக் கொண்டு, நாட்டில் முன்னெடுக்கப்படும் உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிலிருந்து நீண்ட கால அடிப்படையில் உற்பத்தியை அதிகரித்து, அதனூடாக சந்தை விநியோகத்தை மேம்படுத்தி பொருளாதார ரீதியில் பயனைப் பெற்றுக் கொண்டு பணவீக்கத்தை ஈடு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என அரசாங்கம் வாதிட்டாலும், இது ஒரு பாதுகாப்பான தந்திரோபாயமாகக் கருதிவிட முடியாது.

சந்தையில் பொருட்களின் விலைகளை அவதானித்தால், அரசாங்கத்தால் கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், அவை உத்தியோகபூர்வமாக அதிகரிக்கப்படுவதில்லை. சந்தையில் எங்கும் கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் கிடைப்பதில்லை. அரசாங்கத்தின் மொத்த விற்பனை நிலையங்களில் கூட இவ்வாறான கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் கிடைக்கின்றனவா என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான கட்டுப்பாட்டு விலைகளை அத்துமீறி பணவீக்கம் காரணமாக பொருட்களின் விலை எகிறும் போது, இவ்வாறான அச்சிடல் கொள்கைகளின் உண்மையான தாக்கத்தை பொது மக்கள் உணரக்கூடியதாக இருக்கும். எவ்வாறாயினும், அவ்வாறான ஒரு நிலை தோன்றுமாயின், அதிலிருந்து மீள்வது என்பது பெரும் சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

---

மும்பை

இலவசம் இனி இல்லை

# 'பிச்சைக்காரர்களும் உழைக்கனும்'



பிச்சைக்காரர்களும் உழைக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் அரசாங்கம் இலவசமாகக் கொடுக்க முடியாது என, மும்பை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மும்பையிலுள்ள வீடற்ற பிச்சைக்காரர்களுக்கு மூன்று வேளையும் ஆரோக்கியமான உணவு, சுத்தமான குடிநீர், சுகாதாரமான பொதுக் கழிப்பிடங்கள் கிடைப்பதை மும்பை மாநகராட்சி உறுதி செய்ய உத்தரவிடக்கோரி பிரஜேஷ் ஆர்யா என்பவர் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த மும்பை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி திபாங்கர் தத்தா, நீதிபதி ஜி.எஸ்.குல்கர்ணி அடங்கிய அமர்வில் கூறியதாவது:

பிரஜேஷ் ஆர்யா என்பவர் தொடர்ந்த பொதுநல வழக்கை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்கிறது. இது தொடர்பாக மும்பை மாநகராட்சி தரப்பில், 'மும்பையில் உள்ள அனைத்து ஏழை, எளிய வீடற்ற பிச்சைக்காரர்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகிறன. பெண்களுக்கு நாப்கின் வழங்கப்படுகிறது' என்று அளிக்கப்பட்டுள்ள பதிலை இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. இதற்கு மேலும் வேறு உதவிகளைச் செய்யுமாறு உத்தரவிடத் தேவையில்லை என்றே நீதிமன்றம் கருதுகிறது.

வீடற்ற பிச்சைக்காரர்களும் நாட்டின் நலனுக்காக உழைக்க வேண்டும். உழைக்கும் சக்திவாய்ந்த அனைவருமே ஏதேனும் ஒரு வேலை செய்து உழைக்கின்றனர். வீடற்றவர்களும் உழைக்கலாமே. அதைவிடுத்து அவர்களுக்கு உணவிலிருந்து சகலவற்றையும் அரசாங்கம் செய்துகொடுக்க முடியாது. எல்லாவற்றையும் அரசாங்கமே கொடுத்தால், இத்தகைய பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை தான் அதிகரிக்கும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

---



சென்னை

பாதையில் பொலிஸ் பாதுகாப்பு

## முதலமைச்சர் ஸ்டாலின் சைக்கிளில் உடற்பயிற்சி

தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்பதற்கு முன்பு, அவர் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிழக்கு கடற்கரை சாலையில் கோவளத்தில் இருந்து மாமல்லபுரம் வரை சைக்கிள் பயணம் மேற்கொண்டு உடற்பயிற்சி செய்வார். அந்த சமயங்களில் எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் சைக்கிளில் பயணம் செய்து பொதுமக்களுடன் பேசுவதையும், செல்ஃபி எடுப்பதையும் அவர் வாடிக்கையாக கொண்டிருப்பார்.

இந்த நிலையில் தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக நேற்று ஸ்டாலின் சைக்கிள் பயணம் மேற்கொண்டார். அவர் பயணம் செய்த இடங்களில் பாதை நேரே பொலிஸார் பின்தொடர்ந்து பாதுகாப்பு அளித்தனர். இதைத் தொடர்ந்து மாமல்லபுரம் வந்த ஸ்டாலின், அங்குள்ள நட்சத்திர ஹோட்டலில் தங்கி ஓய்வெடுத்தார்.

---

திருமலை

ஆறாம் திகதி

## ராவண சம்ஹார சர்க்கம் பாராயணம்



திருமலையில் நாளைமறுதினம் ( ஜூலை) 6ஆம் திகதி ராவண சம்ஹார சர்க்கம் பாராயணம் செய்ய தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ளது.

கொராணோ நோய்த் தொற்றுப் பரவலில் இருந்து உலகம் விடுபட ஏழுமலையானை வேண்டிக் கொண்டு வசந்த மண்டபத்தில் கடந்த ஜூன் 11 ஆம் திகதி முதல் தேவஸ்தானம் ராமாயணத்திலுள்ள யுத்தகாண்ட பாராயணத்தை நடத்தி வருகிறது. அதில் ஒரு பாகமாக ஜூலை 6ஆம் திகதி ராவண சம்ஹார சர்க்கம் பாராயணம் செய்ய உள்ளதாக தேவஸ்தான கூடுதல் செயல் அதிகாரி தர்மா ரெட்டி தெரிவித்தார்.

இதேவேளை, திருமலை ஏழுமலையான் கோவில் உண்டியல் காணிக்கை ரூ.1.34 கோடி வெள்ளிக்கிழமை வசூலானது. ஏழுமலையானைத் தரிசிக்க திருமலைக்கு வரும் பக்தர்கள் தங்களால் இயன்ற காணிக்கைகளை கோவிலுக்குள் உள்ள ஸ்ரீவாரி உண்டியலில் செலுத்தி வருகின்றனர்.

---

தமிழகம்

ஒன்லைன் வகுப்புகளால்

## ஆசிரியர்களின் பாலியல் சேஷ்டைகள்

தமிழ்நாட்டில் ஒன்லைன் மூலமாக ஆசிரியர்கள் பாடம் கற்பித்து வருகின்றனர். அதிலும், சில ஆசிரியர்கள் தவறாக நடப்பதாகக் சமீபத்தில் குற்றச்சாட்டுகள் எழுந்து சர்ச்சையாகின. அந்தவகையில் சென்னையிலுள்ள பிரபல பாடசாலையின் வணிகவியல் ஆசிரியர் ஒருவர் மீது மாணவிகள் சிலர் அதிர்ச்சிப் புகார்களை தெரிவித்திருந்தனர். இதனையடுத்து ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து ஒன்லைன் வகுப்புகளைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் பல்வேறு விதிமுறைகளை வகுத்தது. இதன் தொடர்ச்சியாக திருச்சியில் உள்ள பிரபல தனியார் கல்லூரி ஒன்றின் தமிழ்த்துறை தலைவர் மீது முதுகலை பயிலும் 5 மாணவிகள் அதிர்ச்சிப் புகார் ஒன்றைத் தெரிவித்திருந்தனர்.

அந்தப் புகாரில், 'வகுப்புகளில் இரட்டை அர்த்தத்தில் பேசுவது, தங்களுக்கு அருகில் மிக நெருக்கமாக வந்து அமர்வது போன்ற காரியங்களில் ஈடுபடுவார். வகுப்பறையில் மாணவிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் தனது அறைக்கு வருமாறு கட்டாயப்படுத்துவார். இதற்கு பெண் உதவிப் பேராசிரியை ஒருவரும் உடந்தையாக இருந்தார்' எனக் குறிப்பிட்டிருந்தனர்.

---

ராசிபுரம்

சிக்னல் டவர்கள் இல்லை

## 'மரத்தில் ஏறினால் ஒன்லைன் வகுப்பு'



அலைபேசிகளின் சிக்னல் கிடைக்காததால், மரத்தில் ஏறி மாணவர்கள், 'ஒன்லைன்' வகுப்பைக் கவனிக்கின்றனர்.

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் முள்ளுக்குறிச்சி அருகே பெரப்பஞ்சோலை, பெரியகோம்பை ஊராட்சிகள் உள்ளன. இங்கு, 20துக்கும் மேற்பட்ட மாணவர்கள், கல்லூரி, பாடசாலைகளுக்கு சென்று வருகின்றனர். தற்போது ஊரடங்கு காரணமாக பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இதனால், ஒன்லைன் வாயிலாக பாடம் நடத்தப்படுகிறது.

பெரப்பஞ்சோலை, பெரியகோம்பையில் சிக்னல் டவர்கள் இல்லை. பேசுவதற்கே சரியாக சிக்னல் கிடைக்காது. பாடம் சம்பந்தப்பட்ட வீடியோ, ஒன்லைன் வகுப்புகளை கவனிக்க வேண்டும் என்றால், 5 கி.மீ., தூரம் உள்ள பகுதிக்கு செல்ல வேண்டும். இதனால், மாணவர்கள், அந்த கிராமத்தில் உயரமாக உள்ள ஆலமரத்தின் கிளைகள் மீது அமர்ந்து, ஒன்லைன் வகுப்புகளைக் கவனித்து வருகின்றனர்.

தினமும் காலை, 9:00 முதல் மாலை, 4:00 மணி வரை உயிரை பணயம் வைத்து, ஒன்லைன் வகுப்பில் பங்கேற்பது, மாணவர்களின் பெற்றோரை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்த ஓராண்டாகவே இப்பகுதி மாணவர்கள், ஆல மரத்தில் அமர்ந்து தான் வகுப்புகளை கவனித்து வருகின்றனர்.



ஜப்பான்

# ஜப்பானில் நிலச்சரிவு: 2 பேர் பலி, 20 பேர் மாயம்

ஜப்பான், டோக்கியோவின் மேற்குப் பகுதியிலுள்ள அடாமி நகரில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாகக் கடந்த சனிக்கிழமை (03)ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் காணாமற்போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல கட்டடங்கள் புதையுண்டுள்ளதால் பலர் மண்ணுக்குள் சிக்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் மீட்புப் பணிகளில் தீயணைப்புத் துறையினரும் ஜப்பானிய இராணுவத்தினரும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மணிலா

பிலிப்பைன்ஸ் விமான விபத்தில்

## 17 வீரர்கள் பலி: 40 பேர படுகாயம்

பிலிப்பைன்ஸில் 92 இராணுவ வீரர்களை அழைத்துச் சென்ற இராணுவ விமானம் விபத்தில் சிக்கியதால் 17 வீரர்கள் பலியாகியுள்ளனர். 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.


சி -130 ஹெர்குலஸ் என்ற பெயர் கொண்ட இந்த ராணுவ விமானம் 80க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்களை அழைத்துக் கொண்டு சுலு மாகாணத்திலுள்ள ஜோலோ தீவிற்கு பயணப்பட்டிருக்கும்போது இவ்விபத்து அரங்கேறியதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் டெல்ஃபின் லொரென்சானா கூறியிருக்கிறார்.

விமானம் ஓடுதளத்தை இறங்க முயன்றபோது ஓடுதளத்தை விட்டு விலகிச் சென்றுள்ளது. இதனால் விமானி மீண்டும் விமானத்தை மேலே உயர்த்த முயற்சிசெய்திருக்கிறார். ஆனால் அவரின் முயற்சி பலனளிக்காமல் விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து ஏற்பட்ட உடனே அங்கு விரைந்த மீட்பு படையினர், இப்போது வரை 20 பேரின் உடல்கள் மீட்டுள்ளனர். 40 பேரை காயத்துடன் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேற்கொண்டு மீட்புப் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதில் மூன்று விமானிகளும் ஐந்து விமானப் பணியாளர்களும் விமானத்தில் இருந்துள்ளனர்.

டொமினிக்கன்

## ‘இழி செயல்களில் ஈடுபடமாட்டோம்’



இந்தியாவால் தேடப்படும் மெகுல் சோக்ஸியை கடத்த சதித் திட்டம் தீட்டியதாகத் தங்கள் நாட்டின் மீது எழுந்துள்ள புகாரை டொமினிக்கன் நாட்டுப் பிரதமர் ரூஸ்வெல்ட் ஸ்கெரிட், "இது முட்டாள்தனமானது. இதுபோன்ற இழிவான செயல்களில் எங்கள் நாடு ஈடுபடாது" என மறுத்துள்ளார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் ரூ.13,500 கோடி நிதி மோசடியில் தொடர்புடைய மெகுல் சோக்சி, 2018லிருந்து ஆன்டிகுவா தீவில் வசித்துவந்தார். கடந்த மே 23 ஆம் திகதியன்று திடீரென அவர் காணாமல் போனார். பின்னர் சில நாள்கள் கழித்து தன் காதலியுடன் கியூபா தப்ப இருந்தவரை டொமினிக்கன் தீவு பொலிஸார் கைது செய்தனர்.

ஆனால், சோக்சி தரப்பு இதைமறுத்தது. அவர் கடத்தப்பட்டதாகவும் என்ற பெண் ஒருவர் அவர் காதலியாக நடித்து கடத்தலுக்கு உதவியதாகவும் கூறியது. இதனால், அவரை இந்தியாவுக்கு நாடு கடத்தும் வழக்கில் சிக்கல் ஏற்பட்டது.


கனடா

கனடாவில் சுட்டெரிக்கும் வெயில்

## ஒரே வாரத்தில் 719 பேர் மரணம்

கனடாவின் மேற்குப் பிராந்தியத்தில் கடந்த ஒரு வார காலமாக வெயில் வாட்டி வதைத்து வருகிறது. அந்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் 49 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளதுடன் அனல் காற்றும் வீசி வருகிறது. குறிப்பாக லிட்டன் என்கிற கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இதுவரை இல்லாத வகையில் 49.6 செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளதாகவும், அப்பகுதியில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அக் கிராமத்தில் பெரும் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெப்பத்தின் உக்கிரத்தைச் சமாளிக்க முடியாமல் கனடாவில் கடந்த வாரத்தில் மாத்திரம் 719 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும், இது வழக்கத்தை விட 3 மடங்கு அதிகம் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனிடையே வெப்பத்தை எதிர்கொள்ளவும், உடலைக் குளிர்ச்சியுடன் வைத்துக்கொள்ளவும் பூங்காக்களில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நீரூற்றுக்களை நோக்கி மக்கள் படையெடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ர:பேல் குறித்து விசாரிக்க நீதிபதி நியமனம்

பிரான்ஸிடம் இருந்து 36 ரஃபேல்போர் விமானங்களை ரூ.59ஆயிரம் கோடிக்கு வாங்குவதற்காக அந்நாட்டின் தஸ்ஸோ நிறுவனத்துடன் இந்தியா கடந்த 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதுவரை 23 ரஃபேல் போர் விமானங்கள் இந்தியா வந்துள்ளன.

இதனிடையே, ரஃபேல் ஒப்பந்தத்தில் முறைகேடு நடைபெற்றிருப்பதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியது. ரஃபேல் விமானத்தின் உண்மையான விலையை விட அதிக விலைக்கு ஒப்பந்தம் செய்துள்ளதாக உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. ஆனால், இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், எந்த முறைகேடும் நடைபெறவில்லை எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், ஒப்பந்த விவகாரம் பிரான்ஸில் பூதாகரமாக மாறியுள்ளது. அந்நாட்டில் செயல்படும் 'மீடியாபார்ட்' எனும் செய்தித் தளமானது. இந்த ஒப்பந்தத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக கடந்த ஏப்ரல் மாதம் செய்தி வெளியிட்டது.

இந்த செய்தியின் அடிப்படையில், பிரான்ஸில் இயங்கும் 'ஷெர்பா' எனும் தொண்டுநிறுவனமானது, அந்நாட்டின் பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கும் பிஎன்எஃப் அமைப்பிடம் புகாரளித்தது.

இதையடுத்து, ரஃபேல் ஒப்பந்தத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதா என்பது குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி ஒருவரை நியமனம் செய்து உத்தர விட்டது.



கோப்பா அமெரிக்கா

# உருகுவேயை வெளியேற்றிய கொலம்பியா

கோப்பா அமெரிக்கா தொடரில், உருகுவேயை கொலம்பியா வெளியேற்றியுள்ளது.

பிரேசிலில் நடைபெற்று வரும் இத்தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற தமது காலிறுதிப் போட்டியில் பெனால்டியில் 4-2 என்ற ரீதியில் உருகுவேயை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு கொலம்பியா தகுதி பெற்றுள்ள நிலையில், உருகுவே தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

பெனால்டியில் கொலம்பியாவின் கோல் காப்பாளர் டேவிட் ஒஸ்பினா இரண்டு பெனால்டிகளைத் தடுத்திருந்தார்.

இந்நிலையில், மற்றைய காலிறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோரை வென்று அரையிறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினா தகுதி பெற்றிருந்தது. ஆர்ஜென்டினா சார்பாக, றொட்றிகோ டி போல், லொட்டரோ மார்ட்டினஸ், லியனல் மெஸ்ஸி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## இங்கிலாந்தை வென்ற இந்தியா

இங்கிலாந்து பெண்கள் அணிக்கு எதிரான நேற்று முன்தினம் வொர்செஸ்டரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்திய பெண்கள் அணி வென்றது. மழை காரணமாக 47 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே குறித்த போட்டி நடைபெற்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இங்கிலாந்து: 219/10 (47 ஓவ.) (துடுப்பாட்டம்: நட் ஷிவர் 49 (59), ஹீதர் நைட் 46 (71), லோரன் வின்ஃபீல்ட்-ஹில் 36 (52), சோஃபியா டங்லே 28 (35) ஓட்டங்கள். பந்துவீச்சு: தீப்தி ஷர்மா 3/47, ஜூலான் கோஸ்வாமி 1/31, ஸ்னே ரானா 1/31, பூனம் யாதவ் 1/43, ஹர்மன்பிரீட் கௌர் 1/24, ஷிகா பாண்டே 1/42)

இந்தியா: 220/6 (46.3) (துடுப்பாட்டம்: மிதாலி ராஜ் ஆ.இ 75 (86), ஸ்மிருதி மந்தனா 49 (57), ஸ்னே ரானா 24 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: சோஃபி எக்கில்ஸ்டோன் 2/36, ஹீதர் நைட் 1/15, சாராஹ் கிளென் 1/26, நட் ஷிவர் 1/34, கேட் குறொஸ் 1/38)

போட்டியின் நாயகி: மிதாலி ராஜ்

தொடரின் நாயகி: சோஃபி எக்கில்ஸ்டோன்

## புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஹமில்டன்



நடப்பு போர்மியுலா வண் சம்பியனான பிரித்தானியாவின் லூயிஸ் ஹமில்டன், மெர்சிடீஸ் அணியுடன் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரையில் புதிய இரண்டாண்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

மெர்சிடீஸ் அணியில் 2012ஆம் ஆண்டு இணைந்த 36 வயதான ஹமில்டன், தனது ஏழு உலகப் பட்டங்களில் ஆறை மெர்சிடீஸில் வென்றிருந்தார்.

## யூரோ: அரையிறுதியில் இங்கிலாந்து, டென்மார்க்



யூரோ கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து, டென்மார்க் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

இத்தாலியில் நேற்று அதிகாலை நடைபெற்ற உக்ரேனுடனான காலிறுதிப் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றிருந்தது.

இங்கிலாந்து சார்பாக, ஹரி கேன் இரண்டு கோல்களையும், ஹரி மக்குவாயா, ஜோர்டான் ஹெண்டர்சன் ஆகியோர் ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, அஸார்பைஜானில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற செக் குடியரசுடனான காலிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு டென்மார்க் தகுதி பெற்றிருந்தது.

டென்மார்க் சார்பாக, தோமஸ் டெலனி, கஸ்பர் டொல்பேர்க் ஆகியோர் தகுதி ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, செக் குடியரசு சார்பாகப் பெறப்பட்ட கோலை பற்றிக் ஸிச் பெற்றிருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான

## தொடரைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், கிரெனடாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் வெற்றமையைத் தொடர்ந்தே 3-2 என தென்னாபிரிக்கா தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 168/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஏய்டன் மர்க்ரம் 70 (48), குயின்டன் டி கொக் 60 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிடல் எட்வேர்ட்ஸ் 2/19 [3], டுவைன் பிராவோ 1/28 [4], ஒபெட் மக்கோய் 1/31 [4], கிறிஸ் கெய்ல் 0/15 [2])

மேற்கிந்தியத் தீவுகள்: 143/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: எவின் லூயிஸ் 52 (34), ஷிம்ரோன் ஹெட்மயர் 33 (31), நிக்கலஸ் பூரான் 20 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுங்கி என்கிடி 3/32 [4], ககிஸோ றபாடா 2/24 [4], வியான் முல்டர் 2/31 [4], தப்ரையாஸ் ஷம்சி 1/11 [4])

போட்டியின் நாயகன்: ஏய்டன் மர்க்ரம்

தொடரின் நாயகன்: தப்ரையாஸ் ஷம்சி



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 5 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.